**39. அந்தணர்களில் ஒருவரான கதை**



தில்லையில் எழுந்தருளிய கூத்தப்பிரானுக்குப் பூசை புரிதற் பொருட்டு அந்தர்வேதியில் இருந்து மூவாயிரம் அந்தணர்களைஅழைத்துவருமாறு புலிக்கால் முனிவர் இரணிய வன்மனை அந்தர்வேதிக்கு அனுப்பினார். இரணியவன்மனும்அவ்வாறே சென்று தேரின்மீது மூவாயிரவர்களையும் அழைத்துக்கொண்டு வந்தான். அந்தணர்கள் தில்லையைஅடைந்து இரு முனிவர்களையுங் கண்டார்கள். இரணிய வன்மன் மூவாயிரம்பேர்களும் சரியாக வந்து சேர்ந்தார்களா என்று எண்ணிப் பார்த்தான். ஒருவர் காணப் பெற வில்லை. அதனால் திகைத்து நின்றான். கூத்தப்பிரான்,"இல் வந்தணாளர்கள் யாவரும் நம்மை யொப்பார்கள். இவரை யொப்போம். ஆதலால் நாம்இவருள் ஒருவர் என்று திருவாய்மலர்ந்தருளினார். "செஞ்சடையில் சின்ன விளம்பிறையார் தில்லைமறையோருருநாம் என்ன விளம்பிறையாரில்"

(இறைவன் ஆடல்]

(புலியூர் வெண்பா)